செய்தி வெளியீடு எண்.183 நாள் 10.3.2008

## பத்திரிகை குறிப்பு

## கழிவுநீர் அமைப்புகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான பயிற்சி புத்தகங்களை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்தியாவின் அதிவேகமான பொருளாதார முன்னேற்றம் காரணமாக நதிகளின் மாசுபடும் தன்மை அதிகரித்துள்ளது. இருப்பினும் கட்டப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நதிகளில் அதிகரிக்கும் மாசு தன்மையை தடுப்பதற்கு போதுமானதாக இல்லை என்பதால் நதிகளின் மாசுபடும் தன்மை மேலும் மோசமடைந்து உள்ளது. ஆகவே, இந்திய அரசு மாசுத் தன்மையை தடுப்பதற்கு தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் வாயிலாக பல கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து வருவதை கொள்கையாக கொண்டுள்ளது.

சென்னை மாநகரில் 2011ம் ஆண்டில் எதிர்ப்பார்க்கக்கூடிய கழிவுநீர் வரத்திற்கு ஏற்ப, முதற்கட்டமாக ரூபாய் 720 கோடியில் சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்பு திட்டம் 2000ஆம் ஆண்டில் விரிவான வடிவமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு கொண்டு செல்லுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகிய பணிகளை செயல்படுத்துவதற்கான திட்டமதிப்பீடு தயாரிக்கப்பட்டது. சுற்று சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் வரும் தேசிய நதிகள் பாதுகாப்பு இயக்குநரகம், ரூபாய் 720 கோடி திட்டத்தில் ரூபாய் 491.52 கோடியை மானியமாக வழங்கியது. மேலும் மதுரை, கும்பகோணம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களுக்கான கழிவு நீர் திட்டங்களுக்கும் நிதி வழங்கியது.

இந்த அனுமதிக்கப்பட்டத் திட்டங்களின் கீழ் பல கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்கி மற்றும் பராமரிக்க மனித வளத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த சூழ்நிலையில் தேசிய சுற்று சூழல் மற்றும் தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்குநரகம், ஜப்பான் உலக கூட்டுறவு நிறுவனத்துடன் இணைந்து 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ''இந்திய கழிவு நீர் பணிகளில் திறன் மேம்படுதல்'' என்ற திட்டத்தை பல்வேறு மாநிலங்களில் பொது சுகாதார துறைகளைச் சேர்ந்த தொழில் நுட்ப இயக்குபவர்கள் மற்றும் பொறியாளர்கள் குறிப்பாக கழிவுநீர் அமைப்புகளை இயக்குதல் மற்றும் பாராமரித்தல் சம்பந்தப்பட்டவர்களுக்கு (கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உட்பட) தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திறன்களை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படவுள்ளது.

ஜப்பான் உலக கூட்டுறவு நிறுவனம் மற்றும் தேசிய நதிகள் பாதுகாப்பு இயக்குநரகம், இந்த திட்டத்திற்கு சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தையும் பங்குதாரராக கண்டறிந்து, இந்த திட்டத்தை தென் மாநிலங்களில் உள்ள இளநிலை மற்றும் இடைநிலை பொறியியல் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்க ஒப்படைத்துள்ளது. இந்த பயிற்சிக்கான செலவினங்களை ஜப்பான் உலக கூட்டுறவு நிறுவனமே ஏற்றுக் கொள்ளும். மேற்கண்ட பயிற்சிக்கான இரண்டு புத்தகங்களையும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் தயாரித்துள்ளது. தென் மாநிலங்களைச் சேர்ந்த பொது சுகாதாரத் துறைச் சார்ந்த பொறியாளர்களுக்கு பயன்படும் நோக்கில், தயாரிக்கப்பட்டுள்ள பயிற்சிக்கான புத்தகங்களை மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்தப் பயிற்சிகளின் முதற்பிரதியினை இந்திய அரசின், சுற்று சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய நதிகள் பாதுகாப்பு

இயக்குநரகத்திற்கான ஜப்பான் உலக கூட்டுறவு நிறுவனத்தின் நிபுணர் திரு. ஜீங்ஜீ வாக்கபயாஷீ அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வரின் செயலாளர் முனைவர் கி. இராஜமாணிக்கம், நகராட்சி நிர்வாகத் துறை அரசு செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை செயலாளர் திரு. எஸ். ஆதிசேஷய்யா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப. மற்றும் காவிரி நீர் ஆதார குழுத் தலைவர் திரு. மோகனகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9